சுவாமி விவேகானந்தா கலாசார நிலையம்

இந்திய உயர் ஸ்தானிகராலயம், கொழும்பு

ஊடக அறிக்கை

**கொழும்பு, சுவாமி விவேகானந்தா கலாசார நிலையத்தின் ஏற்பாட்டில்**

# கட்டுரைப் போட்டி

இந்திய அரசியலமைப்பின் 70 ஆவது ஆண்டு நிறைவு மற்றும் இந்திய அரசியலமைப்பு வரைவுக்குழு தலைவர் டாக்டர் பீம் ராவ் அம்பேத்கர் அவர்களின் 129 ஆவது ஜனன தினம் ஆகியவற்றை முன்னிட்டு கொழும்பிலுள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயத்தின், சுவாமி விவேகானந்தா கலாசார நிலையம் கட்டுரைப் போட்டி ஒன்றுக்கான அறிவித்தலை வெளியிட்டுள்ளது. இப்போட்டிக்கான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**(i) தலைப்புக்கள்:** பங்குபற்றுபவர்கள் கீழ்வருவனவற்றில் ஏதாவது ஒன்றைப் பற்றி எழுதமுடியும்:

1. **டாக்டர் பீம் ராவ் அம்பேத்கர், பௌத்தம் மற்றும் இந்திய அரசியலமைப்பு**
2. **இந்திய அரசியலமைப்பின் கீழ் மக்களின் கடமைகள்**

**(ii) விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்:**

- **வயது எல்லை :** 2019 டிசம்பர் 01 ஆம் திகதி அன்று 25 வயதாகவோ அல்லது அதற்கு குறைவாகவோ இருக்கவேண்டும்
- **மொழி :** பங்கு பற்றுபவர்கள் ஆங்கிலம் , சிங்களம், தமிழ் அல்லது ஹிந்தி ஆகியவற்றில் ஏதாவதொரு மொழியில் கட்டுரை எழுதமுடியும்.
- **சொற்களின் எண்ணிக்கை:** அடிக்குறிப்புக்கள் உள்ளடங்கலாக 2000 சொற்கள்.
- **புள்ளியிடலுக்கான அடிப்படை**
  - விடயப்பரப்பின் மூலாதாரம்
  - சிந்தனை மற்றும் பகுத்தறிவு
  - வடிவம் மற்றும் விடய ஆற்றுகை
  - தெளிவு மற்றும் முறையான மேற்கோளிடல்
  - பிரதியிடல் நேரடியான நிராகரிப்புக்கு வழிவகுக்கும்

**(iii) பதிவும் சமர்ப்பித்தலும்:**

- இப்போட்டிக்காக கட்டணம் எதுவும் அறவிடப்பட மாட்டாது.
- பங்குபற்றுபவர்கள் தமது கட்டுரைகளை தேசிய அடையாள அட்டை பிரதியுடன் 2020 ஜனவரி 24 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ கிடைக்கும் வண்ணம் **essay.svcc@gmail.com** என்ற இமெயில் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

**(iv) வெற்றிபெற்றவர்களுக்கான பரிசுகள்:**

1. **முதலாம் பரிசு:** LKR 20,000
2. **இரண்டாம் பரிசு:** LKR 15,000
3. **மூன்றாம் பரிசு:** LKR 10,000

**(v)** மேலதிக விபரங்களுக்கு சுவாமி விவேகானந்தா கலாசார நிலையத்தை தொடர்பு கொள்ளவும்:

- **தொலைபேசி இலக்கம்:** 2684698
- **இ-மெயில்:** iccrcolombo2@gmail.com

*****

Colombo
19 December, 2019